**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**சாட்சிகளின் வாக்குமூலம்**

**(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை முறை சட்டம்)**

**அமர்வு வழக்கு எண். : 104/2022**

**நாள்: 09.03.2026**

**அரசு தரப்பு சாட்சி** : 27 (LW39)

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 09ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அன்புபிரகாஷ் | தொழில் | |
| தந்தை பெயர் | ஜான்ராமசாமி | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

( A1, A2, A4, A6, A7 ஆஜர் இல்லை. A3, A5 ஆஜர். )

<u>முதன்மை விசாரணை:</u>

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், நேசமணி நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, பணி இடைநீக்கம் செய்யப்பட்டு தற்போது சகாயநகர் வீட்டில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு கமுதி வட்ட காவல் ஆய்வாளராக இருந்த போது, 30.07.2021ம் தேதியன்று, மண்டலமாணிக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஜான் அந்தோணி பீட்டர் என்பவர் வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்திருந்த மண்டலமாணிக்கம் காவல் நிலைய குற்ற எண். 139/2021, பிரிவுகள் 147, 148, 341, 323, 324, 427, 302 இதச வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 10.15 மணிக்கு



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.09 17:34:37 +0530

சம்பவ இடம் சென்று, சம்பவ இடத்தில் இறந்துபோன கருப்பையாவின் பிரேதத்தை பார்வையிட்டு, 11.45 மணி வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.17** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு இறப்பின் காரணத்தை அறியும் பொருட்டு காவலர் ஜெயபால் என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். அந்த **வேண்டுகோள் கடித நகல் அ.த.சா.ஆ.18** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜா, செல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த **பார்வை மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.19** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு சம்பவ இடத்தில் இருந்து இரத்தம்பட்ட மண் (PMO.4), இரத்தம்படாத மண் (PMO.5), இரத்தக்கரை படிந்த வெள்ளை கலரில் பொடி கட்டம்போட்ட துண்டு ஒன்று (PMO.2), இரத்தக்கரை படிந்த ஊதா கலர் செருப்பு ஒரு ஜோடி (PMO.3), இரத்தம்பட்ட முன்பகுதி சேதம் அடைந்த TN 65 B 5035 Hero Honda Plus (PMO. 1) என்ற இருசக்கர வாகனத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் 12.45 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே** குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம் 91 (2 தாள்கள்) ஆனது அ.த.சா.ஆ. 20** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் சாட்சிகள் வளர்மதி, கார்த்திகைசாமி, முத்தையா, கேசவன், கோபால், முத்துராமு, முனியராஜ், முத்துப்பாண்டி, கார்த்திக், ராஜா, செல்வம் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.09 17:34:40 +0530

பின்பு 31.07.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு அபிராமம் மோகன் என்பவரின் பலா தோட்டத்தில் வைத்து எதிரிகள் ரமேஷ்குமார், கார்த்திகைசாமி, இளஞ்சிறார் தமிழரசன் ஆகியோரில் எதிரி 1, 2 ஐ கைது செய்தும், 3வது இளஞ்சிறாரை கையகப்படுத்தியும், எதிரி ரமேஷ்குமாரை விசாரணை செய்ய சாட்சிகள் பூபதி, சுசிலாமேரி ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தாங்கள் சம்பவத்திற்கு பயன்படுத்திய பொருட்களை பலா தோட்டத்தில் பலா மரத்தடியில் புதைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்து சென்றால் அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், 1வது எதிரி ரமேஷ்குமார் பயன்படுத்திய TN 65 AY 9675 என்ற கருப்பு கலர் பல்சர் இருசக்கர வாகனம் ஒன்றை 08.30 மணிக்கு மேற்படி சாட்சிகள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி ஏற்கனவே அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த **வாகனத்தின் புகைப்படங்கள் ஏற்கனவே அ.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புகைப்படத்தில் உள்ள பல்சர் இருசக்கர வாகனம் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வாகனம் தான். அந்த **TN 65 AY 9675 பல்சர் வாகனம் அ.சா.பொ.6** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 1வது எதிரி ரமேஷ்குமார், பலாமரத்தின் அடியில் இருந்து அடையாளம் காட்டி எடுத்துக்கொடுத்த இரத்தக்கரை படிந்த காவி கலர் கைலி(PMO.11), கருப்பு கலர் சட்டை (PMO.12), 41 செமீ நீளம் கொண்ட அருவாள் அதில் 18 செமீ நீளம் கொண்ட இரும்பு கைப்பிடி கொண்டது (PMO.7 Series), 47 செமீ நீளம் கொண்ட அதில் 14 செமீ மரக்கைபிடி உள்ள இரத்தக்கரை படிந்த அருவாள் ஒன்று (PMO.7 Series), இரத்தம் பட்ட 31 செமீ நீளம் கொண்ட அதில்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.09 17:34:43 +0530

11.30 செமீ நீளம் மரக்கைபிடி கொண்ட கத்தி ஒன்று (PMO.8), இரத்தக்கரை படிந்த சுமார் 81 செமீ நீளம் கொண்ட கிரிக்கெட்பேட் அதில் சுமார் 27 செமீ நீளம் கைப்பிடி கொண்டது(PMO.9), இரத்தக்கரை படிந்த சுமார் 3 அடி நீளமுள்ள கட்டக்கம்பு இரண்டு (PMO.10 Series) ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்பு 09.00 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த **அத்தாட்சி அ.த.சா.ஆ.9 ஆக ஏற்கனவே** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்பு எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து, 1, 2 எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பியும், இளஞ்சிறாரை நீதிமன்ற குழுமத்திற்கு அனுப்பியும், வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். மேற்படி **பல்சர் வாகனத்திற்கான படிவம் 91 ஆனது அ.த.சா.ஆ.21** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. **மற்ற வழக்குச்சொத்துக்களின் படிவம் 91 ஆனது அ.த.சா.ஆ.22** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு எதிரி ரமேஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி, 31.07.2021ம் தேதி பகல் 11.00 மணிக்கு T.வல்லம் விலக்குரோடு அருகில் வைத்து, இவ்வழக்கின் இளஞ்சிறார்கள் ரகுபதிபாண்டியன், கணபதிபாண்டியன், முத்துராஜ் ஆகிய மூவரை கையகப்படுத்தி நிலையத்திற்கு வந்து 11.30 மணிக்கு இளஞ்சிறார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு 02.08.2021ம் தேதி காலை 11.15 மணிக்கு இவ்வழக்கின் எதிரி சுரேஷ்குமார் என்பவரை தரக்குடி பஸ் ஸ்டாண்ட் அருகில் வைத்து கைது செய்து, 12.00 மணிக்கு நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு 05.08.2021ம் தேதி மாலை 17.30 மணிக்கு போத்தநதி பஸ் ஸ்டாப் அருகில் வைத்து இளஞ்சிறார் காளிதாஸ் என்பவரை கையகப்படுத்தி 18.00 மணிக்கு நிலையம் வந்து, இளங்சீறார் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்பு 06.08.2021ம் தேதி சாட்சிகள் தங்கபாண்டி, கனிராஜசேகர்,



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.09 17:34:47 +0530

சௌந்தரராஜன், அலெக்ஸ்பாண்டியன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு 07.08.2021ம் தேதி சாட்சிகள் காளீஸ்வரி, பிரம்பாண்டி, முத்துராஜ், ரமேஷ், மூர்த்தி, ஸ்டாலின் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 08.08.2021ம் தேதி உதவி ஆய்வாளர் பேபி இசக்கி பிரகதாம்பாள், SSI ஆயர்ராமன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.08.2021ம் தேதி இவ்வழக்கின் தடய சொத்துக்களை பகுப்பாய்வு செய்ய தலைமைக்காவலர் சரவணக்குமார் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து நீதிமன்றம் மூலமாக இராமநாதபுரம் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த வேண்டுகோள் கடிதங்கள் முறையே அ.த.சா.ஆ.23 மற்றும் அ.த.சா.ஆ.24 ஆக தற்போது குறியீடு செய்யப்படுகின்றன.

பின்பு 14.09.2021ம் தேதியன்று இறந்துபோன நபரின் உடல் உறுப்புகளை பகுப்பாய்வு செய்த தடய அறிவியல் ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கை பெற்றேன். பின்பு 08.11.2021ம் தேதி இவ்வழக்கின் தடய சொத்துக்களை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய துணை இயக்குநர் தடய அறிவியல், தங்கதுரை என்பவரை விசாரித்து ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **Biological Report அ.த.சா.ஆ.25 ஆகவும், Serology Report அ.த.சா.ஆ.26 ஆகவும், Viscera Report அ.த.சா.ஆ.27** ஆகவும் தற்போது குறியீடு செய்யப்படுகின்றன.

பின்பு தலைமைக்காவலர் ஜெயபாலன் என்பவர் காவல்நிலையத்தில் ஒப்படைத்த இறந்துபோன நபரின் இரத்தக்கரை படிந்த காப்பிகலர் கட்டம் போட்ட லுங்கி ஒன்று (PMO.13), ரோஸ்கலர் கட்டம்போட்ட சட்டை ஒன்று (PMO.14) ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த **படிவம் 91 ஆனது அ.த.சா.ஆ.28** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு சாட்சி சாதிக் ரகுமான், ஜெயபால், முதல் நிலை காவலர் சாமிநாதன்,



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.09 17:34:52 +0530

உதவி ஆய்வாளர் ஜான் அந்தோணி பீட்டர், காவலர் சரவணக்குமார், பாலமுருகன், மகாலிங்கம் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

26.11.2021ம் தேதியன்று பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.ஜெகதீசன் என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 09.03.2022ம் தேதியன்று சாட்சி முருகன் என்பவரை விசாரித்து இறந்துபோன கருப்பையாவின் வாகனத்திற்கு சேதமதிப்பு ரூ.500/- என சான்றிதழ் வழங்கியவரை விசாரித்து சான்றிதழ் பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **சேத மதிப்பு சான்றிதழ் அ.த.சா.ஆ.10** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எனது விசாரணை முடித்து இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 148, 341, 323, 324, 427, 302 இதச பிரிவுகளை மாற்றம் செய்து, 147, 148, 341, 427, 302 r/w 120(B), 34 IPC ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை தாக்கல் செய்தேன். அந்த **சட்ட மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.29** ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு வழக்கில் எனது விசாரணை முடித்து, எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். என் விசாரணையின் போது, சாட்சிகள் கேசவன், கோபாலகிருஷ்ணன், கார்த்திகைசாமி, முத்தையா, முனியராஜ், முத்துராமு, கனிராஜசேகரன், சௌந்தர்ராஜன், காளீஸ்வரி, ரமேஷ் ஆகியோர் என்னிடம் சொன்ன விவரங்களைத்தான் நான் குவிமுச பிரிவு 161(3)-ன் கீழ் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை - இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.09 17:34:56 +0530

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .